

ஓவியப் பாவை

22-1-2024










Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

இல	ஓவியப் பாவை
1	காதலும் கல்வாரிப் பலிதானோ?
2	காதல் வரம்
3	காதலாகிப்போனேன்
4	காவியக் காதல்
5	கயல் விழியின் காதல்
6	மகாராணி
7	மன மோகினி
8	மண் பொம்மை
9	மன்னிப்பு
10	மறவாத காதல் மனம்
11	மாசில்லாக்காதல்
12	மாது உளம் பழம்
13	மதுமலர்
14	மெய்யான காதல்
15	மொட்டாய் மலராய் விரியும் காதல்
16	முகாரி
17	மூழிக்கோலம்
18	முல்லைக் கொடி
19	முல்லை வனமோகினி
20	மூப்பில்லாக் காதல்
21	நெஞ்சே நீ சொல்
22	நிலவும் மலரும்
23	நிறம் மாறும் பூக்கள்
24	நூலிடை மேகலை
25	ஊடல்
26	ஒரு தலைராகம்
27	ஒற்றைக் குயில்
28	ஓவியப் பாவை
29	பச்சை மரத்தீ
30	பார்வதி தேவதாஸ்
31	பெண்மை
32	பிரியமானவளே
33	பொல்லாத காதல்
34	பொன்னூஞ்சல்
35	பூஞ்சிட்டு-
36	பூபாளம்
37	போதை
38	பௌர்ணமி
39	புல்லாங்குழல்-காதல்
40	புத்துயிர்

காதலும் கல்வாரிப் பாதையோ?

என் பொன்வானில் கார்மேகக் கூட்டம்
என் பூவனத்தில் கொடும்புயலின் ஆட்டம்
பூவிதயத்திலோ நிலநடுக்கம்-விடியல் காணா
இரவினிலோ ஓயாத இடிமுழக்கம்

அமுதும் தேனும் வேம்பாய்க் கசந்திட
காதல் நெஞ்சிலோ வெறுமை
நிலவும், மலரும் வெறுப்பேற்றிட
பாறையாய் மனம் மாறிய கொடுமை

தீ என் தேகத்தை உண்டால்,
காற்றில் பரவி உன் சுவாசத்தில் கலப்பேன்,
மண் என் தேகத்தைத் தின்றால் -பூவாகி
தினம், உன் கூந்தல் அலங்கரிப்பேன்

மரணம் எனக்கில்லை இனியவளே
உன் மனதில் நான் வாழும்வரை
துயரம் எனக்கில்லை கீர்த்தனமே -என்னிதயம்
உன் பெயர் சொல்லித் துடிக்கும்வரை

காதலர்கள் சாகலாம்-இன்னுயிர் காதலியே
காதல் சாவதில்லை-காதலுக்கு சாவுமில்லை-
காதல் சாசுவாதமானது

உன்னை மணிமுடியாய் சூடிய இதயத்திற்கு-
இனியவளே முள்முடி சூட்டினாய்,
அமுதாய் பருகிய நெஞ்சிற்கு –ஆலகாலமாய் மாறினாய்,
நாடிய கால்களுக்கும், அணைத்த கரங்களுக்கும்,
ஆணிகள் அறைந்தாய்-காதல் மனம்
கலங்கிச் சுமந்திட சோகச் சிலுவை கொடுத்தாய்

பூங்கொடி தழுவிய தேகம் கசையடி படவும்,
செந்தேன் பருகிய இதழ்கள் காடியைச் சுவைக்கவும்
என்னைக் கைநெகிழ்ந்தாய்? அன்பே ஏனடி
என் காதலைக் கல்வாரிப்பலியாய் மாற்றினாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் வரம்

கயல் விழிகளோ கண்களைக் கவ்வித் தழுவ
கிள்ளை மொழிகளோ கவிதை சொல்ல
முத்துப் புன்னகையோ என்னைச் சூடிக்கொள்ள
பூவாசமோ சுவாசத்தில் சுகந்தம் பூச ,வந்த பூ மகள்

இடையும், நடையும் இதயத்தைக் கொள்ளை கொள்ள
கார் கூந்தலோ பூவனத்தை சொல்ல-
ஆனிப் பொன் மேனியில் நாணம் வண்ணம் சொல்ல
கட்டியமாய்க் கொலுசொலிக்க வந்த காதல் மகாரணி

வேலோ விழிகள், வில்லோ புருவம்
இடையோ கொடி, நடையோ நாட்டியம்
காமன் கணை வீசி-காதல் அலை பாய
என்னை அள்ளிச் செல்ல-வருவது
காதற் கடலா இல்லை கன்னித் தேவதையா?

காதல் கணைகளால் ரணமான நெஞ்சம்
காதல் தேவதையிடம் வரமாய்ப் பெற்றதோ
பூ நெஞ்சில் -காதல் தஞ்சம்.

மையெழுதிய மலர்விழிகளும், மெய்யெழுதிய
பேரழகும் நாளும் என்னை மயக்கிட
மஞ்சளும், குங்குமமும் பூங்குழலில் மலர்களும்
எந்நாளும் நிலைத்திட வரம் வேண்டும் என்றாள்

குமுத வாயால் அமுதைப் பருகத் தந்து
கொவ்வையிதழ்களைக் கவ்விக் “கொல்”
பூங்கொடி என்னை கட்டியணைத்துக் “கொல்”
காதல் சொல், கவிதை சொல் என்றாள்

இதழ் “கள் போதையில், இவள் கள்ளோ, மலைத்தேனோ
தொட்டணைத்தால் தேகம் புல்லரிக்கும் பேரின்ப உணர்வோ-
காதல் சுனையோ , கற்பகத்தின் பூங்கொம்போ-மனம்
வியந்து மகிழ்ந்திட காதலில் மயங்கி நின்றேன்

காதல் அஞ்சுகத்தை கொஞ்சி மகிழ்ந்து
அருஞ் சுவையைப் பாடிப் புகழ்ந்து-மாலை சூடி
மணாளனாய் மாறி மகிழ்ந்தேன்- மணவாழ்வோ
இன்பத்தேன் சுவைத்தேன் அறிந்தேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதலாகிப் போனேன்

சொல்லாமல் என் இதயத்தைத் திருடிச் செல்ல
பொல்லாத காதல் என் இதயத்தை கொல்ல-
காதல் தீயில் வெந்திடும் மனம்
காதல் மழைக்காயத் தவமிருக்கும் சுபதினம்

கண்களால் மனங் கொத்தும் காதல் மரங்கொத்தி
நான் மயங்கிட இதயத்தை திருடிய காதல் மீன்கொத்தி
நான் சூட வண்ண மாலையான பூங்கொத்து
கவிதை பாடக் காதலான தேன்சிந்து

வண்ணமும் , வாசமுமாய்க் காணும் காட்சிகள் மாற
எல்லாம் அழகாய், எங்கும் அவளாய்த் தெரிய
மொழியும் மாறிக் கவிதையானதடி-என் இதயமும்
குயிலாய்க் கானம் பாடி மயிலாய் ஆடுதடி

காதலான நெஞ்சம் -பூவிற்கும் வான்நிலவுக்கும் காதல் சொல்ல
பாலும், பழரசமும் அவள் செவ்வாய் இனிப்பைச் சொல்ல
இசையெல்லாம் காதலியாள் கனிமொழியாகிட-என்
எழுத்தும் சித்திரமான விசித்திரமடி என் மோனலிஸா.

காதலில் விழுந்த இதயம் கோயிலானதடி-
என் இசைக்கு குயிலும் இரசிகையானதடி-
இதயத்தை உருமாற்றும்-இன்பக்காதல்
அதிசயத்திலும் அதிசயமடி.

பொங்கும் புதுவெள்ளம் நெஞ்சை நிறைக்க-
மாமல்லன் எனக்கு கல்லிலும் உன் காட்சியடி சிவகாமி,
கண்ணண் எனக்கு- குயிலின் கானத்திலும்-
ராதையே உன் காதல் பாசுரமடி

வண்ண பூச்சூடி வரும் வான்மதியாய்
என் காதல் வானில் நீயடி
உன் அன்பைச் சுவைக்கும் தேனீயாய்
காதல் ரோஜாவே நானடி.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காவியக் காதல்

எண்ணமும் நீயாக என் இதயமும் நீயாக
கிட்டாத வைரமணியாய் கிட்டிய
என் காதல் ***சிந்தாமணியே***-உனை
என் மணிமுடியில் சூடவோ? என்றேன்

ஏழுலகுவென்று வரும்-மாமன்னன் சூடக் காத்திருக்கும்
சிந்தாமணி - என்னை அன்பரசன் சூடுவதோ?
பண்போடு பதில் சொன்னாள் பெண்ணரசி

என் சிந்தை கவர்ந்த பொற்குண்டலமே
ரவிவர்மன் சித்திரமே, உன்னை சூடிட ஆசையடி-
கர்ணனாய் வழங்கி காதல் தருவாயா என்றேன்
எனை வாதில் வென்று வாகை சூடிக்கொள் என்றாள்-
காதலையும் வாதில் வெல்லத் துடிக்கும் ***குண்டலகேசி***

சூதும் வாதும் வேதனை தரும்
வாதில் வெல்ல காதல் தத்துவமல்ல
ஆண் பெண் தூய அன்பே காதல்
அறிவாய் பெண்ணே என்றேன்

கன்னியர் கடைக்கண் வீச்சிலும் -நெஞ்சம்
வளையா-பதி -நான்-உன் வேல்விழியில் -
என் வைரமனமும் வளைந்ததடி
மானாய் வீழ்ந்ததடி- உன் கைத்தலம் பற்றிட
காதல் தருவாய் என்றேன்.
என் கெஞ்சலிலும் அஞ்சுகத்தின்
பூ நெஞ்சு இரங்கவில்லை-

உன் நூலிடை சூடிய மணிமேகலையில்
என்னை கட்டிப்போட்டு
காதலால் எனை ஆட்கொள்ளடி என்றேன்
என் நூலிடையும் நோகுமே-மணி
மேகலையும் நொருங்குமே-உம் காதல்
இதயத்தை கட்டினால் என்றாள் ***மணிமேகலை***

உன் காற்சிலம்பாய் நானிருப்பேன்-நடையில் கோவலன்
காதல் கீதமாய் நான் ஒலிப்பேன் நீ இரசிப்பாய்
கண்ணகியே என்னை அணிந்துகொள்ளடி
காதலால் "அணைத்துக் கொல்லடி"

கோவலனாய் வேண்டுகின்றேன்
கொஞ்சம் மனமிரங்கடி-என்றேன்
நாணிப் புன்னகைத்தாள் கண்மணியாள்
கண்ணே நகையான காதல் நங்கை
புதுச் சிலப்பதிகார பெண்ணாள்

காதல்சூடிய பொன்மணி ***புதுச்சிந்தாமணி***
காதல்தென்றலில் ஆடிடும் பொற் ***குண்டல கேசினி***
காதல் ***வளையலால்*** என் நெஞ்சில்
பொன்விலங்கிட்ட தேவதையாள்
காற்***சிலம்பிலும்*** என் காதல் கேட்டு
இரசிக்கும் புதுக் கண்ணகியாள்
ஐம்பெரும் காப்பிய நாயகியோ சொல் மனமே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

கயல் விழியின் காதல்

காதல் நெஞ்சின் ஏக்கத்தை கயல் விழிகள் சொல்ல
உதிரும் கார் கூந்தல் வண்ண மலர்கள் சொல்ல
பூங்கொடியின் வாடிய வடிவம் சொல்ல
ஓவியத்தின் கலைந்த வண்ணம் சொல்ல
கலங்கி நின்ற காதலன் நான்

கலைந்த குழலும் கரையும் மையும் சொல்ல
கானக்குயிலின் மௌனம் சொல்ல
கண்ணீர் ததும்பிடும் கடைக்கண் சொல்ல
துடிக்கும் செவ்விதழ் சொல்ல
நெஞ்சம் தவிக்க வருந்திய காதலன் நான்

வாடிக்கிடந்த நெஞ்சில் காதல் பூமலர
வற்றிக் கிடந்த குளத்தில் காதல் மழை பொழிய
எனைப் பற்றிப் படரத்துடிக்கும் பூங்கொடியை
கட்டியணைத்தே காதல் சொன்னேன்

கள்ளூறும் தேன் இதழ்களில்- இதழ்களால்
கவிதை சொல்ல ஆடியது கலாப மயில்
நூலிடை ஒடிய -நூபுரம் சினுங்கக்-காதலால்
அள்ளியணைக்கப் பாடியது கவிக்குயில்

முல்லைப் பூ முகத்தில்
புது உதயம் கண்ட ஜொலிப்பு
அல்லிக்குப் பௌர்ணமி
நிலவைக் கண்ட களிப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

என் மகாராணி

என் மகாராணி, தான் சூட மஞ்சளும்,
குங்குமமும், மலர்சரங்களும் வேண்டுமென்றாள்
என் மனதை என்றும் ஆட்கொள்ள
காதல் நெஞ்சும் தரவேண்டுமென்றாள்.

என்னைக் காலமெல்லாம் சேயாக்கி
காதலால் சீராட்ட வரம் வேண்டுமென்றாள்
அஞ்சியே நானும்-ஆண்டவா என்னை
அருட் தந்தையாக்கு எனக் கெஞ்சிட
என் மழலைகளுக்கு நீர் தான் தந்தையென்றாள்.

எழில் கொஞ்சும் மெய்யில் நாணம் புதுமெருகேற்ற,
தோகை மயிலாய் மனம் விரிந்தாட, கயல்விழிகள்
காதல் நதியில் நீராட. காற்கொலுசும், கைவளையும்
ஆனந்தக் கூத்தாட, நெற்றிச்சுருளால் என்னை
கட்டிப்போட்ட முத்துப்பல் அழகி
என்னை பார்த்து மெல்லச் சிரித்தாள்.

என் வரவு கண்டு கமலமுகம் சிவக்க
கயல்விழிகள் குதூகலிக்க
உறவு சொல்ல ஒருவன் உண்டென்ற களிப்போடு
"முதல் மனிதனைக் கண்ட" மங்கையோ பாமினி
நாணிச்சிவந்த பெண்மையோ காமினி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

மன மோகினி

வாசப்பூக்களும் வாடும், தேவதையின்
பொன்மேனி வாசம் நுகர்ந்து,
தேனும், மனம் கோனும்-இனியவள்
செவ்வாய் மொழி கேட்டு

நாணமே நாணியது-இவள் கன்னச் செம்மை கண்டு,
கானப் பூங்குயிலும் பாடிப் புகழ்ந்தது
பூந்தேவதையின் கனிமொழி கேட்டு.

இட்ட அடியில் மெட்டி சொல்லும்
காதல் மொழிகள் நூறு,
எடுத்த அடியில் கால் கொலுசு கூறும்
கவிதைகள் பலநூறு.

இவள் நடை கண்டு
அன்னமும் தன் நடை திருத்தும்,
இவள் அழகில் மயங்கி
வான்நிலவும் தேய்ந்தே உடல் மெலியும் .

நிலவே-நீ போனபின் -உன் நீரல்லியம்
வாடிப்போனது-கனவே நீ கலைந்தபின்
கயிறறுந்த பட்டமாய் -என் இதயமும்
புழுதியில் வீழ்ந்ததே.

மார்கழிப் பனியும் என்னைத் தீயாய் வாட்டிட
மாசித் தென்றலும் என்னைப் புயலாய் வீழ்த்திட
கோடையில் காயும் நதியானேன்
பாடையில் போகும் நிலைக்கானேன்

ஈர்ப்பு விசையாய் என்னை ஈர்த்தவளே
நீ போனபின் வாழ்வும் பிடிப்பின்றிப் போனதடி
காந்தபுலமாய் எனை கவர்ந்தவளே
உனை பிரிந்தபின் வாழ்வே சூனியமாய் ஆனதடி.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

மண் பொம்மை

மனமெங்கும், அவள் போட்ட காதற்கோலங்கள் ,
இதயத்திலோ, ஒற்றைக் குயிலின் சோக கானங்கள்,
ஆடல் மறந்த கானமயிலாய் வாடும் உள்ளம்
அணை உடைத்து நதியாய் ஓடும் கண்ணீர் வெள்ளம்.

என் கானமயிலே, கலாபமயிலின் கால்களை உடைத்திட
கோகிலமே, தன் சோடிக்குயிலின் பாடலில்
சோகத்தை நிறைதிட- காதலுக்கும் சத்திய சோதனை

பார்த்தாய், ரசித்தாய், பலகாலம் பழகிக் களித்தாய்,
ஏழை என் இதயத்தை காதல் இன்பத்தால் நிறைத்தவளே,
என் இதயம் நொருங்கிட ஏனடி என்னைப் பிரிந்தாய்?

என்னுள் உலாவிய சுவாசக்காற்றே
என் மூச்சுத் திணறிட-நஞ்சானது?
தேனாய், அமுதாய் இனித்த உறவோ
என்னைத் தீயத்திடும் எரி நரகானது


முத்தமழையின்றி வரண்ட செவ்வாயிதழ்கள்,
தித்திக்கும் தேன் மொழி கேளாமல் கூம்பிய செவிகள்-
மெல்லிடையாள் பூமேனி தழுவாமல் வாடிடும் தேகம்,
பூமேனி வாசம் நுகராமல் திணறிடும் சுவாசம்,
மதிமுகம் காணமல் இருண்ட விழிகள்,
இதயம் கவர்ந்தவளை எண்ணித் துடிக்கும் இதயம்,
காதலின் அவலக்கோலங்கள்

பொன்மானே மாயமானாய் உருமாற
என் காதலும் கானல் நீரானது-கன்னியருக்கு
காதலும் பொழுது போக்காக-காதலே
நீ விளையாடி உடைத்திடக் கிடைத்த
மண்பொம்மை நான்தானா? என் மனம் தானா?

காதல் புயலில் திண்டாடும் பூ மரமாய் மனது
வேரறுந்து கண்ணீரோடு மண்ணில் சாய்ந்திட
ஏழையின் காதலுக்கு விழுதுகளுமில்லை-
விழுந்த காதலை நிமிர்த்திட உறவுகளுமில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

மன்னிக்க வேண்டுகிறேன்





கொல்லும் உன் மௌனத்தால்-காதலே
கோடையில் காயும் பூவானேன்-கார்முகிலாய்
அள்ளிச் சொரிந்த உன் அன்பு மழையின்றி
வற்றும் நதியும்- வாடும் பயிருமானேன்,
காதலே மன்னிக்க வேண்டுகிறேன்

தினம், தினம் உன் அன்பு மழையில் நனைய
மனம் உன்னை யாசிக்கின்றது.
மனத்துயரமெல்லாம் நீங்கிட காதலே
உன் தாய் மடிக்காய்த் தவமாய்த் தவமிருக்கின்றது.

நீரின்றி வாடும் நீலோற்றபலமாய் உள்ளம்
நின் அன்பின்றி வாடத், தேனின்றி வாடிடும்
பூங்குருவியாய் மனம் வெதும்பிட
ஏனடி இந்தப் புரயிா மௌனம்?

உன் விழிபார்க்கும் தூரத்தில் நானிருந்தும்,
உன் விழிகளிலோ என்னை காணாத வெறுமை
என் செவி கேட்கும் இடத்தில் நீயிருந்தும்,
உன் கனிமொழி கேளாத துயரம்



கோடையில் காயும் பாலையாய் நெஞ்சு கொதித்திட
கொளுகொம்பின்றித் தவிக்கும் முல்லையாய் நெஞ்சு தவித்திட
என் காதல் கொடி படர வள்ளல் -பாரியே
உன் கன்னி இதயத்தை கனிவாயத் தருவாயா?



கண்மணி ஒரு புன்னகை மட்டும் காட்டடி
என் காதல் காயங்கள் ஆறும்
ஒரு பார்வையால் என் நெஞ்சைத் தழுவடி
பூங்கொடி, என் காதல் வேதனை தீரும்
காதலின் வேதனையை என் காதலே-நீ அறிவாய்-
கண்களில் நீர் சொரிய வேண்டுகின்றேன்
காதலே என்னை மன்னிப்பாயா?

கன்னி மகளே காதல் பூவாய் என்னைச் சூடிக்கொள்ளாயோ?
என் புள்ளிக்குயிலே என் சோடிக்குயிலாய்-இணைந்து
பாடி மகிழ்வாயா? கன்னி மயிலே
உந்தன் கலாப மயிலோடு ஆடிக் களிப்பாயா?

பார்வையால் ஏனும் என்னைத் தழுவிச் சொல்லடி பார்வதி
நான்தான் உன் காதல் என்று
ஒரு சாடையால் ஏனும் என்னைத் தேற்றடி
நீதான் என் தேவதாஸ் என்று.



பிரியமானவளே என்னைப் பிரியாதே
உன் பிரிவென்பது என் இறப்பென்று நீ அறிவாயா?
சொல்லடி என் காதல் கண்மணி.

நெய்யின்றி அணையும் விளக்கானது என் நெஞ்சம்
நீயின்றித் தீக்கும் எரிநரகானது என் பூ மஞ்சம்
நீரின்றி வாடும் பூவானது உள்ளம்
விழிகளிலோ மடையுடைத்த கண்ணீா வெள்ளம்



கன்னியர் காதலும் பொன் மானோ?
நீரோடை தேடும் கலைமானாய் மனம் ஏங்கி
ஏமாறக் கானல் நீரோ?



உன் வில்லைகளின் குவியத் தூரத்திற்குள்
அனலில் விழுந்த விழுந்து துடிக்கும்
என் இதயத்தைப் பாரடி
முல்லைச் சிரிப்பால் ஒரு மொழி சொல்லடி

உன் இதயத் துடிப்பிலோ ஒலிக்கும் முகாரி
என் இதயச் சோகமடி- கண்ணால் ஏனும்
காதல் சொல்லடி என் கண்மணி-
காதல் காயங்கள் ஆறும் என் பொன்மணி

உன் வில்லைக்குள் நீந்துவது விழிகளல்ல-வேல்கள்-
விழுத்தியது மானை அல்ல காதலி-என் மனதை

பொட்டு வைத்தாய், பூங்குழலில் பூ வைத்தாய்
குமுத வாயில் அமுதப் புன்னகை வைத்தாய்
குவளை விழிகளில் குறுநகை வைத்தாய்-ஏனடி
பூ நெஞ்சில் என் காதலை வைக்க மறந்தாய்.?
நெஞ்சு வலிக்குதடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மறவாத காதல் மனம்





செந்தாமரை முகத்திலோ கதிரைக் காணாத தவிப்பு
செந்தேன் இதழிகளிலோ பூந்தேனி அமராத தவிப்பூ
பூமாலை சூடிய பொன் கழுத்தில்-ஆண்டாளே
சூடிக் கொடுத்த மலர்மாலையாய் என்னைச்
சூடாயோ எனும் தவிப்பு

மையணிந்த கயல்கள்-மயங்கி உயிர்வருத்தும் காதல் சொல்ல,
கையணிந்த வளையல்கள் சிணுங்கி மெய்யணைத்துக்
கையணை கட்டக் கெஞ்ச, முகம் மலர்ந்த
நாணச் சிவப்போ-முற்றி செவ்வாய்யிதழ்களுக்கு
செம்மை கூட்ட கலங்கி நின்றாள் பூவை

அகமணிந்த காதல் அணியோ-விழிவழியே
என்னைச் சூடிக்கொள் சேதி சொல்ல ஆடி வந்தாள்,
என் காதல் நெஞ்சை தன் நெஞ்சால் களவாடி உறவாட
என்னை நாடி வந்தாள் நான் மயங்கும் பாவை
எனை மயக்கிடும் பேரழகுப்பூவை.

காதல் என்பது இதயத்தின் மொழி
என் கவிதையோ உன் இதயத்துடிப்பொலி
என் உதயம் என்பதோ -அழகே உன் முக ஒளி
என்றும் நீயே என் காதல் வானின் வான்மதி

வானமுதே, தேன் மொழியே என் வாழ்வின் உயிர் மூச்சே
பருவங்கள் மாறினாலும், துருவங்கள் இடம் பெயர்ந்தாலும்
என் இதயக்கோயிலின் காதல் தேவதை என்றும் நீயடி கண்மணி

உயிரே உனை நினைப்பதற்கு ஒரு நொடிபோதுமடி
உன்னை மறப்பதற்கோ பல கோடி யுகங்கள் வேண்டுமடி
உனை நான் நினைப்பதில்லை- காதலி -ஏனெனில்
உன்னை நான் மறப்பதில்லை

நீ சூடும் மணமாலை நானடி-ஆண்டாளே
என்னைப் பூவாய் சூடும் பூங்குழலி நீயடி
மகிழ்ந்து கானக்குயிலே இணைந்து என்னோடு பாடடி
என்றும் பிரியாத சோடிக்குயில்கள் நாமடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மாசில்லாக் காதல்

முதல்வரியில், முக்கனியாய் அவளினிக்க-மறுவரியில்
அடிக்கரும்பாய் நானிக்க-இருவரி இணைந்த திருக்குறளாய
இரு மனமிணைந்து ஒருமனமாய் மலர்ந்தது
ஜாதி, மதம் கடந்த எம் மாசில்லாக் காதல்

முப்பால் கலந்த காதல் திருப்பாலில் முத்தமிழும்,
முக்கனியும் சுவையாக, முல்லை, மல்லிகை மணமாக
இளமைக்கு இனிமை காதல் -இதயங்களுக்கு
முப்பொழுதும் எப்போதும் பெருவிருந்து காதல்

முப்பாலாய் இனித்த காதலுக்கும் சோதனை
சாதி, மத வேற்றுமை
ஏழை பணக்காரன் என்ற பிரிவினை

ஓட்டைப் படகாய் இதயம் ஆற்றில் மூழ்கிட
நூலறுந்த பட்டமாய் எண்ணம்-காற்றில் அலைந்திட
மாசில்லாக் காதலும், மடிந்துபோகுமோ என்றஞ்சிட
இலையுதிர்கால மரமாய் எம் நிலைமை

கானகுயிலிற்கும், கலாப மயிலிற்கும் காதல் வரும்போது
ஏழைக்கு வந்த காதல் பிழையானது.
உயர்சாதிக்கும், மதத்திற்கும் பிடிக்காத தீட்டானது

“காதலைக் கொல்” அல்லது “காதலனைக் கொல்வோம்”
பெற்றவர். உற்றார் மிரட்டிட- மிரண்ட பெண்ணவள்
என்னைக் காத்திட-தன்னுயிரை மாய்த்தாள்-காதலி
பிரிவைத் தாங்காத நெஞ்சம் நஞ்சருந்தி மடிந்திட
எம் காதலும் அமரகாவியமானதே
அம்பிகாபதி, அமராவதி துன்பக் கதையானதே

சாதி, மத, ஏழை, பணக்காரன் இல்லாத
காதல் உலகை நோக்கி காதலர் எம் பயணம்
காலமெல்லாம் காதலராய் வாழும்
ஏதேன் தோட்டத்தில் எம் நடனம்
அன்பே தெய்வம் அறியாத மதங்கள்
காசேதான் கடவுள் புரிந்த பணக்கார மனங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மாது உளம்-பழம்

அன்பே- ஆயிரம் முத்துக்கள் கொண்ட
ஒரு காஷ்மீர் மாதுளம்பழம்போல்-என் நெஞ்சுக்குள்
இனிக்கும் உன் இன்பநினைவுகள்.

என் கனவும் நீயாகி, காரிருளில் உலவும்
பௌர்ணமி நிலவும் நீயாகி-காதலாகி
என் நெஞ்சில் கூவும் கானக்குயிலம் நீயாகி
நீலவானாய் என் நெஞ்சில் விரிந்தாய்.

உன்னைப் பார்த்தபின் என் நெஞ்சுக்குள்
காதல் தேனூற்றுக்கள்
உயிரிலும், மெய்யிலும் ஆனந்தப் பாலாறுகள்

என் என்பும் உன்னைக்கண்டு துடித்திட
என் இதயமும் உன்னைக் கண்டு மகிழ்ந்திட
கண்டு கொண்டேன் எனக்கென
இறைவன் படைத்த ஏவாள் நீதான் என்று
உன் ஆதாம் நான்தான் என்று

மதுமலர் சூடிடும் மாது உளம், மாதுளம் பழம்போல் இனிக்க
விழிமயங்கிச் சுவைக்கும் அழகால் மொழி மயங்கித் தவிக்க,
பார்வைகள் ஆயிரம் கதைபேசிக் களிக்க
காதல் கிளிகளாய் கொஞ்சி ,.சோடிக்குயில்களாய் கவிபாடி
மயங்கி நின்றோம், மெய்மறந்து நின்றோம்.
காதலாகி கரைந்த காதலர் நாம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மது மலர்

செந்தேன் இதழ் விரித்து செவ்வாய் மலர,
முத்துக்கள் கண்சிமிட்டும்,
குழிவிழும் கன்னத்தில் நாணம் மலர
நெஞ்சம் மயங்கும்-

துடியிடை கடந்து துள்ளும்
மதுமலர்க்கூந்தல் பூவனத்தை பழிக்கும்
காதல் கொள் எனச்சொல்லும்,
அவள் பார்வை நெஞ்சைத் தகிக்கும்

சுவாசம் நிறைக்கும் பூமேனி வாசம்
உயிரை மயக்க-இதயம்-காதல்
இறக்கை விரித்து எழுந்து பறக்கும்.

ஒரு பார்வையால் -நெஞ்சுக்குள் பனி மழை பொழிய,
ஒரு புன்னகையால் தேகத்தில் மின்சாரம் பாய
மொழியெல்லாம் கவிதை-கனவெல்லாம் தேன் மழை

இதயமெங்கும் இசை மழை ஒலிக்க
ஊனான மெய்யில்-தேனாய் காதல் ஊற்றெடுக்க,
கவிதை, தூதாய் சொல்லிய காதல்
கன்னி மனம் சூடக் காதல் பூவானது

காதல் கிளிகளாய் கதை பேசி-
கானக் குயில்களாய் கவிபாடி-நாளும்
வானம் பாடிகளாய் காதல் வாழ்க்கை.

மது மலர் சுவைத்து மது போதையில் தள்ளாடும்
மலர் வண்டாய் மாதிவள் கண்மலர் மொய்த்து
காதல் போதையில் தள்ளாடும் மனம்.
நாளும் எமக்கோ காதலர் தினம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மெய்யான காதல்

மெய்யாய் என்னைக் காதலிக்கின்றாயா? -இல்லை
என் அழகு மெய்யைக் காதலிக்கின்றாயா?
சொல் கண்ணா என்றேன் பேரழகுப் பேதையான்

மையுண்ட என் விழிகளும் மயங்கிச் சோர
செவ்விதழ் கள்ளும் போதையை ஏற்ற
கட்டியணைத்தவன் காதல் போதையில் -கன்னியின்
கட்டுடலில் காட்டுத் தீயாய்ப் பற்றிய காமத்தீ

காதல் வீணை என்னில் மோக இராகம் இசைத்து
விடியும் வரை காம சூத்திரம் படித்து
காதல் தீயை அணைத்து அணைத்து வளர்த்து
தன்னை என்னுள் விதைத்த காதலனோ காமுகன்

மெய்யை நேசித்து, கருப்பையில் மொய் எழுதி
பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போன காதல்-
காதல் மடிந்து- கர்ப்பம் பூத்திடக்
காமத்தால் பிறந்த ஞானம், கன்னி மனதோ ஊனம்

பொய்யாய் அவன் சொன்ன காதல்
தேனாய் இனித்து, பழங்கள்ளாய் நாறிப்புளித்திட
திரிந்த பாலாய்-இனித்த காமத்துப்பால்
சப்பித் துப்பிய சக்கையாய் பெண்பால்

மண்ணாலான உடல் மண்ணுக்கே திரும்பிட
மாதவள் கையிலே நஞ்சு-மனதிலே மறவாத
பாடமானது பொய்யான காதலும் நஞ்சு
அழகாய்ப் பிறப்பதும் நஞ்சு

தேகத்தில் நிலைத்த அன்போ காமம்
தேகம் கடந்து இதயம் கலந்த அன்போ காதல்
இதயம் கடந்து ஆன்மாவில் நிலைப்பது பிரார்த்தனை
காமம் கடந்தால் இருப்பது கடவுள் புரிந்தது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

மொட்டாய் மலராய் விரியும் காதல்

கன்னியர் விழிகளே கயல்களாகிக் காதல் தூண்டில் போடும்
கயல்களே காதலில் சிக்கித் தூண்டில் மீனாய்த் தவிக்கும்,
கண்ணீரும் கடலாகிக் காதல் நெஞ்சை மூழ்கடிக்கும்
கவிதையும், அலைபேசியும் காதல் தூதாகி ஊடல் தணிக்கும்

கால்கொலுசும் அழைப்பு மணியாகி இதயக் கதவைத் தட்டும்,
ஒரு மொழியும் காதல் மந்திரமாகித் தேவதையை வாழ்த்தும்
வஞ்சியின் ஒரு புன்னகையும் காமத்துப்பாலாய் இனிக்கும்,
வண்ணப்பூக்களும் அவள் வடிவாகி நெஞ்சை நிறைக்கும்

ஒரு பார்வையும் வாசத்தென்றலாய்
உயிரையும் மெய்யையும் ஒன்றாய்த் தழுவும்,
கடைக்கண் பார்வையும் காமன் கணையாகும்
முகத்திரையும், பூவுடல் மூடிய ஹாபாயும்
காதல் நெஞ்சுக்கு இரும்புத் திரையாகும்.

தித்திக்கும் காதல் தேனே, திரை மறைத்த வெண்நிலவே
எத்திக்கும் காயாமல் என் திக்கில் காயும் காதல் நிலவே
நெஞ்சம் கவிதை பாடித் தவிக்க
மொக்கான நெஞ்சம் காதலாகி மலரும்

பூவிழிகள் தொட்டுத் தழுவப் பரவும் காதல் பரவசம்
மும்தாஜே என் முழு நிலவே-உன்தன்
ஷாஜகான் நானடி-லைலாவே என் தேன் நிலவே
உன்தன் மஜ்னு நானடி காதல் பாசுரமாகும்.

சொட்டுச் சொட்டாய்த் விழுந்து-தூறல் கடந்த
பெருமழையாய் காதல் மழை நெஞ்சை நிறைக்கும்
மொக்கான மனம்-கதிர் கண்டு பூத்தாடும்
இதயம் காதல் பூவனமாகும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

முகாரி

வானாய் என் நெஞ்சில் விரிந்து
வண்ண நிலவாய் உலாவந்தவள்,
தென்றலாய்த் தழுவி, தேன்மொழியால்
பூ மடியில் ஆறுதல் ஈந்தவள் என் காதலி

என் விழிகளுக்கு புது ஒளியாகி
என் மொழிகளில் கவிதையாகி
உயிர்க் காற்றாய் என்னுள் உலாவி
என் இதயக்கோயில் குடியிருந்த- காதல் தேவதை
என்னை மறந்ததேனோ?

இதயமோ எரிதணலில் விழுந்த புழுவாய்த் துடித்திட
உதயம் காணாத இருளில் நாட்கள் கழிந்திட
வற்றிய குளமாய்-வாடிய நெஞ்சம்-வசந்தத்தை தேடி
வான் கொடைக்காய்த் தவமிருக்கும் என்தன் மஞ்சம்

காதல் நிலாவும் கண்மறைய
காரிருளும் என்னை ஆட்கொள்ள
என் நெஞ்சிலோ எரிநரகின் கொடுந்தகிப்பு
இதயத்திலோ இணையைப் பிரிந்த
அன்றிலின் பெருந் தவிப்பு

வண்ணம் கலைந்த ஓவியமயாய்
வடிவம் குலைந்த காதல் சிற்பமாய் மனது
சோகக் கடலில் மூழ்கிடும் காதல் படகு
அமில மழையில் கருகிடும் காதல் உறவு

உயிரே உன் உறவே என் சொர்க்கம்
உன் பிரிவோ- என்-நரகம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

மூழிக் கோலம்

காதல் கலைந்த நிலையில்-இதயம் எழுதிய
கவிதையும் மூழிக் கோலமானது
சாதல் ஒன்றே வழியாகிட-மனமோ
சீதையை இழந்த ஸ்ரீராமனாய்த் தவிக்குது.

இதயத்திலோ சூனியத்தின் ஆட்சி
மனமோ அம்மணமான காட்சி-காதலின்
அழகுக் கோலம் அலங்கோலமாகிட
இதயவீணையிலோ முகாரியின் மாட்சி

துண்டு மேகங்களாய் உடைந்த உள்ளம்
காதல் வானில் நிம்மதியன்றி அலையும்
மும்தாஜை பிரிந்த ஷாஜகானின் இதயம்
முடியிழந்த மன்னாய்த் தவிக்கும்

தேடல் ஓய்ந்து, தட்டுதல் கழித்து,
கேட்டல் மறைந்து மனம் ஓய்ந்திட
கிட்டிய சத்திய தரிசனம்
சூனியமே பேரானந்தமாய் மாறிடப்
எங்கும் அமைதி!
ஓம் சாந்தி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

முல்லைக் கொடி

கொடி உடல், கலைந்த பூங்குழல், ஒட்டிய வயிறு,
ஈர இதழ்கள், வண்ணக் கயல்கள்,
வறுமை வரைந்த வசீகரம் அவள் தோற்றம்.-
கூழும் கஞ்சியும் ஒரு வேளை உணவாகும்
பட்டினி பழகிப்போன உணர்வாகும்.

வேலை தேடிபோனப் இடமெல்லாம்-உடலை வேவு
பார்க்கும் ஆணினம், கந்தலான சேலையைத்
உரியத் துடிக்கும் மாறாத துச்சாதன இனம்

சிந்தையில் காமம் எரிய-பார்வையில் மோகம் கசிய-
ஊர் வம்பளந்து வெட்டியாய் வலம் வரும்
மதன காமராஜ சீமான் குலம்-
அகலிகையை அடையத் துடிக்கும்- இந்திர குணம்

எண்ணெய் வற்றிக் குப்பி விளக்கின் சுடர் துடித்திட
கவிழ்த்து வைத்த சோற்றுப்பானையும், நீர்க்குடமும்-
கொடியில் கிடக்கும் பழஞ்சேலையும் சொத்தைச் சொல்ல
அடுப்பங்கரையில் உறங்கிடும் பூனை சொந்தம் சொல்லும்

விழி மழை கடைக்கண் வழியே தூறிட
கிழிந்த பாயில் விழித்துக்கிடந்த
கொழுகொம்பில்லா முல்லைக்கொடி

பொத்தல் கூரைவழியே ஒரு வானம், ஒரு நிலவு
சில நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்து கண் சிமிட்டும்
மழையும்-காற்றும் மின்னலும் -வேண்டாத விருந்தாய்
ஏழையின் வீட்டில் மாரியல் தங்கிச் செல்லும்

கற்பு நெருப்பாய் எரிய-கடவுளும் , காமனும்
துன்புற விழித்திருந்தாள்-வள்ளலாய்க் காதல் பாரி
வரும் வழி பார்த்துக் சோகத் தென்றல் வருடிச் செல்ல
ஏழை காத்திருந்தாள்?

மாதவியாய் இருந்திருந்தால் காலடியில் செல்வக் கோவலர் காத்திருப்பார்?
மனம் மாறியிருந்தால் சீதைக்கு இராவணனும் வாழ்வளித்திருப்பார்
ஶ்ரீராமன் வரும் வரைக்கும் வறுமைச் சிறையிருக்கும்
இவளோ சோகவனச் சீதை.
கண்ணனிற்காய்த் தவமிருக்கும் கோதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

முல்லை வன மோகினி

மேனியோ மணக்கும் முல்லை வனம்
பூக்கும் புன்னகையிலோ காதல் மணம்
நாணமோ செக்கச் சிவந்த அந்திவானம்
கனி மொழியிலோ புள்ளிக்குயிலின் கானம்

காதல் மழை பொழியும் கன்னியோ
என்னை மூழ்கடிக்கும் இன்ப வெள்ளம்,
வண்ண நிலவும் வானவில்லும் சூடிய
அழகு வானாய்க் கன்னி உள்ளம்

முள் வனமும், பூவனமாய் மாறிட
கல் மனதும் தேன் கனியாய் இனித்திட
காளை நெஞ்சில் காதலின் அதிசயம்

மூடனும் , கவி காளிதாசனாய் மாறிட
கற்சிலைக்கும் காதல் அபிஷேகம் நடந்திட
ஆண்டாளின் அருள் மழை

நாணிச் சிவந்த விழிகளில் காதல் மலர் பூத்திட
ஆணிப் பொன்மேனியும் பௌர்ணமியாய் ஒளிர்ந்திட
ஈர இதழ்களிலோ இனிக்கும் கனிரசம்
பூங்கொடிக்கு கொழுகொம்பான காதலோ அதிசயம்

மணமாலை சூடி மங்கை மணமகளாக-என்னை
ஆளும் திருமகளாக- முல்லைவன மோகினி
என் நெஞ்சத்தேரில் பவனிவர
காதல் தேரீந்த பாரிவள்ளாய் நான்
உள்ளத்தைச் சூடித் கொடுத்த ஆண்டாளாய் அவள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

மும்தாஜ் மஹால்



இதயத்திலோ, இமயத்தைச் சுமந்திடும் கனம்
இரு விழிகளிலும் கங்கை வடியும் ரணம்
உயிர் மூச்சினிலோ அனல்காற்றின் ஆலாபனம்
மும்தாஜே-என் உயிர்க்காதலே உனைப் பிரிந்தபின்-
என் உலகோ அணையாச் நெருப்பெரியும் சூரிய வனம்



உன் பூமேனி தழுவாதபோதெல்லாம் தேகமோ தீ குளிக்கும்-
குமுத வாயில் அமுதம் சுவைக்காதபோதெல்லாம்-
நா வரண்டு நெஞ்சு விடாய்க்கும்

உன்னை காணாதபோதெல்லாம்-நெஞ்சில்
நீர் தேடும் கலைமானின் ஏக்கம்
கண்டபின்னரோ காதற்கிளிகளின் விழாக்கோலம்
ஜோடிக் குயில்களின் கானம்





நிலவே நீயின்றி என் நெஞ்சிலோ நித்தம் அமாவாசை
நீ கண்ணயர்ந்த மஞ்சத்திலோ மௌனித்த
எம்தன் காதல் இசை


கனிரசமாய்ச் செவ்வாயிதழ் “கள்” சுவையும் இனிக்க
சொல்லும் மொழியும் காவியமாய் ஒலிக்க,
கால் கொலுசுகளின் இன்னிசையில் இராகமாலிகை சிலிர்க்க
முல்லையும், மல்லிகையும் பூமேனி வாசம்
மும்தாஜே! என் அன்பே நீதான் என்தன் காதல் தேசம்

மையெழுதிய விழிகள் காமன் கணைகளாய் மயக்க
மெட்டியும், மேகலையும் மோகனராகம் இசைக்க-அன்றில்
பறவைகளாய்க் கூடிக் களித்திடக் காதல் தந்தவள் கண்ணயர்ந்தாள்
காதலன் தன் தூக்கத்தை மறந்து துக்கத்தில் நிலைத்தான்

இதயம் கண்ணாடிபோல் நொருங்கிட-நூலறுந்த காற்றாடியாய்
மனம் புழுதியில் புரண்டிட-இதயராகம் இசைத்தவள்
மீளாத்துயில் கொண்டாள்-எரி நரகில் நான் வாழ
என் காதல் மகாராணி வானுலகில் குடி கொண்டாள்

அன்பே, நீயின்றி என் வாழ்வே எரி நரகானது
அரியணையும் சிறையாகி,
மணிமுடியும் என்க்குச் சுமையானது

மண்ணும், பொன்னும் போகமும் இருந்தும்
நீயில்லா உலகோ எனக்கு நிலவில்லா வானம்
கண்ணில் தெரியும் வண்ண மலர்களும்-நீ போன பின்
தேன் தும்பி எனக்கு காகிதப் பூக்களான அவலம்



காதல் மலராய் என்னைச் சூடி, கவிக்குயிலாய் இசைபாடி
பூந்தென்றலாய் என்னைத் தழுவி, இதயமாய்த் துடித்து,
உதிரமாய் ஓடி, உயிர்காற்றாய் என்னுள் உலாவி,
உணர்வாய் என்னுள் பரவிக் கிடந்தவளே-ஏனடி
இரவு வருமுன் கலையாத இந்த தூக்கம்
என் நெஞ்சினிலோ கனக்கும் சுமையாய்த் துக்கம்.

என்னுயிரே மும்தாஜே!-உன் பொன்னுடலை
விதைத்த மண்ணை திருமண்ணாய் நெஞ்சில் பூசி
கண்மணியே நீ கண்ணயரக் கட்டிவைத்தேன்
காதல் மாளிகையாய் மும்தாஜ் மஹாலை.



கண்மணியே கண்ணுறங்கு
விண்ணும், மண்ணும் உள்ளவரை பிரியமே
நம் காதலுக்கு இது மாட்சியடி.

கண்பார்த்து நெஞ்செழுதிய அன்புக்காவியமே
விண்ணில் நீயும் எனக்காய் ஏங்கிட
உன் மன்னவனோ மாதுயரில் மூழ்கிட
என்னவளே-இனியவளே
உன்னோடு கழித்த ஒவ்வொரு நொடியும்
கோடி வசந்தங்களடி-இன்றோ
உனைப் பிரிந்து வாடும் ஒவ்வொரு கணமும்
எரிநரகில் வாழும் பல யுகங்களடி



உன் பொன்மேனியைத்-தீயோ, மண்ணோ தீண்டிடாமல்
காத்திட அமைத்தேன் அழகு தாஜ்மஹாலை.-
உன் காதல் நெஞ்சில் வாழ-காதல் கைதியாய் -நான்
ஆயுள் சிறையிருப்பேன் என் கண்மணியே நீயுறங்கு

அஞ்சுகமே என் அருஞ்சுகமே-மண்ணுக்குள்
உன் பூமேனி மறைந்தாலும்- என் மனதுக்குள்
உன் காதல் என்றும் மாறாது மறையாது-
விண்ணேகி நான் வந்து உன்னைச் சேரும் வரை
கண்மணியே, என் காதல் பைங்கிளியே-
என் காதல் மாறாது மறையாது
கண்மணியே கண்ணுறங்கு



விண்மீன்களும், வெண்மதியும் கூடி விளையாடும்
வான் வெளியில்-கண்மணியே உன்னோடு
கைகோர்த்து உலாவர-மன்னவன் நானும்-
விண்ணேகும் நாளிற்காய்த் தவமயாத் தவமிருப்பேன்-

கண்ணே! கள்ளிருக்கும் மலரும் கவிதைச்
சுவையிருக்கும் தமிழும் உள்ளவரை
என் உள்ளிருக்கும் காதல்- சாகாது
சத்தியமாய் ஒரு போதும் உனை மறவாது

ஒருவரியாய் என்னோடு இணைந்து-இரு வரித்
திருகுறளாய் என் வாழ்வை மாற்றிய-வாசுகியே
என் வாழ்விற்கு-பொருள் கொடுத்த அறத்துப்பால்-நீ
வற்றாத அன்பின் நிதிக்குவையான பொருட்பால் நீ
என்றும் இன்பம் தரும் காதற்பால்-நீ

முப்பாலாய் என்னள் கலந்து-வாழ்வை
தித்திப்பால் நிறைத்தவளே-தேனே
அப்பால் நீ போனபின்-என் வாழ்வோ
வேம்பாயக் கசக்குதடி



இருவரிக் குறளாய் இணைந்து மகிழ்ந்திருந்தோம்
அன்பே, உன் பிரிவால்-ஒருவரியாய்ப்
பொருளிழந்து அரை நிர்வாணி போலானேன்.



அர்த்த நாரிஸ்வரராய்
ஒன்றினைந்து மகிழ்ந்திருந்தோம்-இன்று
அண்ணகன் போலானேன்.

என் காதல் தேவதையே-நீயின்றி
என் இதயக்கோயில் பாழ்பட
நாடிழந்து, வீடிழந்து-கைதியாய்
கண்ணீரில் வாடுகிறான்-உன் காதலன்

ஐவேளை தொழுத மனம்- இனி எவ்வேளையும்
அல்லாவைத் தொழுதே உனக்காய்த் துவா கேட்கும்,
க.:.பாவை சுற்றி வந்து -ஹாஜியான உள்ளம்
உன் சமாதியை சுற்றி வந்து -கண்ணீரால் வுழு செய்து
நம் காதலை வாழ வைக்கும்

வருடத்தில் ஒருமுறை நோற்கும் ரமழான் நோன்பும்-இனி
வாழ்நாள் எல்லாம் உனக்காய்த் தொடர
எஞ்சிய என் வாழ்நாள் எல்லாம் ரமழானாக
நீயே என் பேரன்பு, உன் நினைவே என் பெருநோன்பு



என் காதலின் அட்சய பாத்திரமே-நீ போனபின்
காதல் மலரின்றி வாடும் தேன்தும்பி நான்
என் காதலின் கற்பக தருவே -நீ மடிந்திட
என் நெஞ்சம் வேரும், விழுதுமின்றிச் சாய்ந்ததடி

சுழலும் புவியும், அலையும் கடலும் திசைமாறினும்
பாடும் குயிலும், இரையும் சங்கும் ஓயினும்
உனைச் சுற்றிச் சுழலும் என் இதயமும்
உனைப் பற்றி பாடும் என் உயிரும்-இனியவளே,
என்னுயிர்க் காதலே மும்தாஜே-உன்னை
ஒருபோதும் மறவாது.



தாஜ்மஹால் இது கல்லறையல்ல-காதல் கோயில்
இது கல்லும் உளியும் தீட்டிய கற்சிலையல்ல
இதயமும் உணர்வும் எழுதிய அமரகாவியம்
இது விசுவகர்மாவின் வேலைப்படல்ல
காதல் இதயங்களின் அழியாத கோலம்



இது கலைப்படைப்பல்ல ஷாஜகானின் காதல் வேதம்
இது விரல்களும் வீணையும் மீட்டிய இசைக்கோலமல்ல
காதலின் தேவராகம்- அமரகாதலின் புது வேதம்

இது மண்ணில் மலர்ந்த- பளிங்கின் அற்புத வியப்பல்ல-
இறந்தும் காலத்தால் அழியாத தெய்வீகக் காதலின்- புத்துயிர்ப்பூ
இது மயானபூமியல்ல -காதலின் தியானபீடம்

இது படித்துச் சுவைக்க காவியம்
பார்த்து இரசிக்க ஓவியம்-எம் காதலைச் சொல்லும்
காலத்தால் அழியாத பளிங்குச் சிற்பம்

மானுடரே காதல் செய்வீர்-காதலே அன்பின் வேதம்
காதலில்லா வாழ்வோ சாவின் நாதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

மூப்பில்லாக் காதல்

ஆயிரம் காதல் கவிதைகள் எழுதி முடியும்வரை
என் அறைக்கதவு திறவாது-என் ஒளி விளக்கு அணையாது
சுந்தரிகளே காதல் தொந்தரவு வேண்டாம்
அறையைத் தாழிட்டு, என்னை நானே சிறையிட்டு
தனிமைச் சிறையில் கவிதைத் தவமிருந்தேன்

வரமாய்க் "காதல்" கதவை தட்டியபோதெல்லாம்
சாபமாய்க் "காதைத்" தாழிட்டு கவிதை எழுதினேன்

கம்பனும், வள்ளுவனும் வாழ்த்திட
கவியரசும், காளிதாஸனும் அடியெடுத்து கொடுத்திட
கவியரங்கும் நிறைவுக்கு வந்தது.
நெஞ்சிலோ அம்பிகபாதியின் பூரிப்பு
நினைவிலோ அமராவதியின் காதல் நினைப்பு

தவிப்போடு திறந்த தாள்-கசப்போடு மூடிட
வெளியே வெறுமையின் கொடிய ஆக்கிரமிப்பு
என் பழமுதிர்ச்சோலையில் பைங்கிளிகளுமில்லை
காதல் பண்ணிசைக்க கோகிலங்களுமில்லை

கண்ணாடியில் முகம் பார்த்தேன்-முடியெங்கும் வெள்ளி நரை
கவிதாகூரின் வெண்தாடியோ நெஞ்சுவரை-விழிகளோ
கண்ணீர் மழை, காயத்திலோ காலமிட்ட முதுமை
நெஞ்சினிலோ இளமை மாறக் காதல் கவிதை

காலத்தின் அளவீடாய் வயதான நாட்காட்டி
என்றோ நின்றுபோன கடிகாரம்-
காதல் செய்க என்றே கடிகாரத்தை இயக்கிட
சிவசக்தியின் நர்த்தனமாய் முட்கள் நகர்ந்திட
நம்பிக்கை பிறந்தது.-இன்னமும் ஆயிரம்
கவிதைகள் எழுதிடத் தவமாய்த் தவமிருப்பேன்

முதுமை உடலுக்கே- காதல் நெஞ்சுக்கல்ல
கவிதை பிறந்திட, காதல் கிளிகள் கூடிக்களித்திட
இதயமெங்கும் அன்றில் பறவைகளின் கொண்டாட்டம்.
காதல் கோகிலங்களின் இசைக்கோலம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

நெஞ்சே நீ சொல்

அள்ளி முடிந்த மலர்க்கூந்தல் வாசம் வீச,
அன்ன நடையில் கட்டியமாய்க் கொலு சொலிக்க
சின்ன இடையில் மேகலை சினுங்க
நடையோ நாட்டியமாக வந்த காதல் அபிநய சுந்தரி

வட்ட முகமும், வண்ண விழிகளும் நெஞ்சைத் தழுவிக் கொல்ல,
அள்ளிகொள் "அருந்திக்கொல்" எனச் சொல்லும்
செவ்விதழ்ப் புன்னகை, விரகதாபத்தை கூட்ட,
கண்டதும் கவிதைத் தேன் சுரந்திட வருவது யார்
வண்ணமயிலா? வஞ்சிக்கொடியா ? நெஞ்சே நீ சொல்

கவிதையால் காதல் சொல்லி,
கண்களால் என்னைத் தழுவி-இதயத்தை
திருடிக் கொண்டவள் திருமகளோ?

காதல் தீபத்தை நெஞ்சில் ஏற்றி,மோகனராகத்தை
இதய வீணையில் மீட்டிக் கவிஞனாய்
என்னை உருமாற்றியவள் கலைமகளோ?

காதலுக்கு அஞ்சும் நெஞ்சை
காமன் கணைகளால் புண்ணாக்கி,
காதல் விளை நிலமாக்கிய அஞ்சுகம்
மலை மகளோ? நெஞ்சே நீ சொல்

காதற் செல்வம் தந்து, கல்வியாய்க்
காதல் சொல்லித் தந்து
காதலால் நெஞ்சில் வீரமும் பிறக்க -காதலா
என்னைக் காதலி என்றவள்
முத்தேவியரும் ஒன்றான ஆதிபரா சக்தியோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

நிலவும் மலரும்

நிலமகள் கண்டு கருவான் நிலவும் காதல் சொல்ல,
மதுமலர் கண்டு பூஞ்சிட்டும் காதல் கொள்ள,
கடல் மகன் கண்டு காதலால் கங்கையும் தழுவி மகிழ
என் கவிதை கண்டு காதல் கொண்ட அழகு மங்கை

காதல் மழையில் நனையாத இதயங்களில்லை,
நெகிழாத நெஞ்சங்களுமில்லை, குயில்கள் கூவிட,
மயில்கள் ஆடிட, மலர்கள் பூத்திட -இயற்கை
மகிழ்ந்து கொண்டாடும் காதல் சுகமானது

கங்கைக்கு அணை எதற்கு? கருவான் நிலவிற்கு சிறை எதற்கு?
கடல் தேடி கலந்து மகிழும் கங்கையின் காதல் மாறவில்லை
புவி நோக்கி கவிபாடும் வெண்நிலவின் காதல் ஓயவில்லை
காதலே வாழ்வு, காதல் இன்றேல் சாவு

நிலவும், கருவானும் பிரிந்தால் அழகிழந்து
இருளாகும் உலகு,
அன்பே நீயும் நானும் பிரிந்தால்
ஒளியிழந்து இருளாகும் நம் வாழ்வு

மண் பூத்த மலர்களும் மாலைக்குள் வாடிவிடும்,
வான் பூத்த நிலவுக்கும் அமாவாசை வந்துவிடும்,
நம் மனம் பூத்த காதலோ வாடாது மறையாது-
பின் கவலையேன்? நெஞ்சில் கலக்கமேன்?

இணை பிரியாத அன்றில் பறவைகள் நாம்,
இறைவன் இணைத்திட்ட ஏதேன் தோட்டத்து
காதல் சோடிகள் நாம்,-பிரிவென்பது நமக்கில்லை,
மரணம் கூட காதலைப் பிரிப்பதில்லை

செம்புலப் பெயல் நீர்போல் ஒன்றான இதயம் இரண்டாவதில்லை-
கடலோடு கலந்த கங்கை திசை மாறுவதில்லை
மிதிலையின் மைதிலியே உன் சீதாராமன் நானடி-உமையாளே
உமையொருபாகன் என்னில் ஒரு பாதி நீயடி
நெஞ்சம் மகிழடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

நிறம் மாறும் பூக்கள்

கானும்போதெல்லாம்-கண்களால் காதல் மழை பொழிந்தவள்,
கண்மூடித் தூங்கும் போதும் வண்ணக் கனவாகி வருபவள்
வானும், மண்ணும் வாழ்த்துச் சொல்லிட-
உயிர்காற்றாய் உதிரத்தில் கலந்து -என் உலகும்,
வாழ்வுமாகி நின்ற என் காதல் தேவதை எங்கே?

செம்புலப் பெயல் நீர்போல்-அன்புடை நெஞ்சங்கள்
கலந்து பிறந்த காதல் பொய்யாகுமா? மைவிழியும்,
கிளிமொழியும் நெஞ்சில் எழுதிய காதல்
பழங்கதையாகுமோ? கலைந்த கனவாகுமோ?

மைவிழி தந்த காதல் மயக்கம் கண்ணுக்குள் ஜொலிக்க-
மான்விழி தந்த காதல் போதையோ நெஞ்சுக்குள் இனிக்க
காதல் அமுதுண்டே, தேவனாய் -அன்று
சாகாத காதல் வரம்பெற்றேன்-இன்று

அமுதே என்னைக் கொல்லும் ஆலகாலமாகிட
ஒவ்வொரு அணுவையும் அவள் நினைவு வாட்டிட
சாகாமல் சாகின்றேன் நிம்மதியிழந்து வாடுகிறேன்
காதலைப் பிரிந்த காதலன் நான்

கனவை மட்டும் தந்துவிட்டு-என்
காதல் இதயத்தை எடுத்துச் சென்றாய்
கண்ணீரை மட்டும் கொடுத்துவிட்டு-ஏனடி
என் கானச் சிரிப்பை திருடிச்சென்றாய்?

பூவையர் காதலும் -பூப்போல ஒரு பொழுது மட்டும் தானோ?
பாவையர் உள்ளமும் திசைமாறும் காற்றோ?
புயல் வீசும் கடலோ? நிறம் மாறும் மலரோ?
இல்லை மலர்தாவும் வண்டோ? மனமே சொல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

நூலிடை மேகலை

நூலிடையோ இடை ஒடிய என்னை கட்டிக்கொள்,
இறுகத் தழுவிக்''கொல்'' எனக் கெஞ்ச,
பூ விழிப் பார்வையோ என்னைத் தழுவிக் கொல்ல,
செவ்விதழ்த் தேனோ என்னை அருந்திக் கொள்-
காதல் போதையை ஏற்றிக் கொள் எனக்
காமன் விருந்துக்கு அழைக்க -மலைத்தேன்
மலைத் தேன் என வியந்தேன், காதலில் விழுந்தேன்

கார் கூந்தல் மல்லிகை காதல் மணம் வீச
பவளச் செவ்வாய்ப் புன்னகை காதல் மொழி பேச,
குவளை விழிப்பார்வை தென்றலாய்த் தழுவ
நூலிடையில் மேகலை கட்டியமாய்க்
காதல் தேவதை இவள்தான் என்றதே

பகலில் மலராகி, இரவில் பௌர்ணமி நிலவாகி
காதலால் என்னை வருத்தும் நளாயினி-புன்னகைப்
பூச்சொரியும் காதல் வனமோகினி இவள்தானோ?

மைவிழி அசைய, கை வளை குலுங்க, மேகலை சினுங்க
இடை கடந்து நடையோடு பூஞ்சடை சதிராட
நடையோ காதல் நாட்டியமாக-என் உயிரோடு மெய்யாட
காதலால் என்னை வீழ்த்திய காமன் படையாய் இவள்

கனிமொழியால் காதல் சொன்ன தமிழினி
காதல் கணையால் எனை வாட்டும் காமினி,
கவிதையால் காதல் தூது விட்ட பாமினி- காதல் ராகம்
நானிசைக்க இதயம் தந்த யாழினி-வாழ்கவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

ஊடல்

ஈந்த ஒரு முத்தம் போதாதென்று எதிர்ப்பை காட்டவோ
என்னவள் கன்னமே-நீயும் சிவந்து செங்கொடி பிடித்தாய்?
இல்லையெனில் இதழே நீ ஏன் நாணிச் சிவந்தாய்?

காதல் முத்திரையை கன்னி இதழ்கள்
என் இதழ்களில் பதிக்க-நூலிடை
தழுவிய கரங்கள் கலாபத்தை இசைக்க,
என்னைத் தழுவிய பூங்கொடியும் நாணிக் குழைய,
பூங்கன்னங்களோ செங்கமலமாயச் சிவக்க
இது காதற் காலம்.

செங்கமலமே காதலாகி நீ மலர
ஒளி தந்த கதிர் நானே
நிலையற்ற உன் காதலால்-இன்று
நிலை குலைந்து-தேய்ந்து மறையும்
அமாவாசைச் சந்திரனும் நான்.

கன்னியர் இதயத்தை தேனென்றேன்
தெவிட்டாத கரும்பென்றேன்
கொட்டியபின் தெரிந்தது தேனல்ல, தேள் என்று
சுவைத்தபின் தெரிந்தது கரும்பல்ல-
இதயம் இரும்பென்று

சித்திரமல்ல -காதல் அழித்து வரைவதற்கு
சத்திரமல்ல இதயம், காதலர் வந்து போவதற்கு
மண்ணில் இட்ட மாக்கோலமல்ல-காதல்
மாலைக்குள் கலைவதற்கு

மலரல்ல காதல் -ஒரு மாலைக்குள் வாடுவதற்கு
ஈருயிர் கலந்து-ஒருயிராகிடும் யோகநிலை **காதல்**
கடலும், நதியுமாய் இரு மனம் கலந்து ஒன்றாகிடும்
இன்பச் சங்கமம் காதல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-04-2023

ஒரு தலை ராகம்

தித்திக்கும் இதழ்களால் தேவதையே-உன்
பொன்மேனியெங்கும் முத்தக்கோலம் போடவா?
சக்கி முக்கி கற்களாய் மாறி சகியே
காதல் தீபம் ஏற்ற வா?

வாசுகியே என் காமத்துப்பாலே- வள்ளுவனாய் மாறி
உன்னைப் பாடவா? பருகவா?- வெண்ணிலவே
உன்னைத் திரையிட்ட மேகக் கலிங்கத்தை சிறையிட்டு
உன் அழகை வடிக்வோ? வரையவோ? சுவைக்கவோ?

என் சித்தம், நினைப்பு செய்கையெல்லாம் ஆட்கொண்ட
என் அன்பே,ஆண்டாளே, கண்ணனாய் என்னை மாற்றி
காலமெல்லாம் காதல் சொல்ல வா!

உன் முகம், நிலவோ, மலரோ என வியந்தேன்
வான்மதியாய் நீ ஒளிர்ந்தாய்
பூந்தேகம், அகிலோ, சந்தனமோ என மயங்கினேன்
வாசப் பூக்களாய் நீ மணந்தாய்
உன்மொழி, கிளியோ குயிலோ என அதிசயித்தேன்
கனிமொழியாய் ஒலித்தாய்

என் நினைவே இல்லாத உன்னிடம்-
என் நெஞ்சைப் பறிகொடுத்தேன்
என் கனவே வராத உன்னிடம் காதலை யாசித்தேன்

ஒற்றைக் குயிலாய் நான் கரைய-உன்
சோடிக்குயிலோடு நீ கானம் பாடினாய்
பட்ட மரமாய் நான் வாட –வசந்தமே
பசுமையுடன் நீ பூத்துக் குலுங்கினாய்

உயிரே உனை மறப்பதென்பது-என் இறப்பென்று
உனக்கு தெரியாதோ? வாழ்த்துகிறேன் இனியவளே
என்றும் நீ நலம் வாழ்க என்றே.

வாழும் போதும் உனை நேசித்தேன்
சாகும்போதும்-மாறாக் காதலோடு சாகின்றேன்
கல்லறையிலும் உன் காதலுக்காய்
தவமிருப்பேன்-காதலே என்னை மறவாதே.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

ஒற்றைக் குயில்

மலர்க்கூந்தல் காதலியே-ஏனடி
என் மனம் வரைந்த ஓவியத்தைக் கலைத்தாய்?
மைவிழி காவியமே ஏனடி என் இதயம்
செதுக்கிய காதற் சிற்பத்தை உடைத்தாய்?

வண்ண மலரே முள்ளாய் மாறிட
வாசத்தேனே கள்ளிப்பாலாய் ஆனது
என்ன எண்ணமெல்லாம் கானல் நீராய் மாறிட
நூலறுந்த காற்றாடி புழுதியில் வாடுது

வரமாய்க் கிடைத்த காதலும் சாபமாய் மாறிட
பொன்மானைத் தேடிப் புதிய சீதையும் போய்விட
சோகவனத்தில் சிறையிருக்கும் *புதிய ஸ்ரீ*ராமனாய்த் துயரம்

என் காதலும் மாயையாய் போனதே
என் மனப்பாரமும் இமயமாய் ஆனதே
காதல் தேவாதாஸின் வருத்தம்

என் சொர்க்கமே இன்று நரகமாய் மாறிட
காதல் அமிர்தமே ஆலகாலமாய் என்னைக் கொன்றிட
நஞ்சுதான் நெஞ்சுக்கு நிம்மதியானது

ஈரமண்ணுக்குள் என் கலையாத உறக்கம்
சோகப் பண்ணுக்குள் என் தீராத கலக்கம்.
ஒற்றைகுயிலாய் என் பாடல்
ஊனக் காலோடு கானமயிலின் நடனம்

என் கல்லறைக்கு கண்ணீர்ப்பூக்கள் வேண்டாம்
ரோஜாக்கள் வாடிவிடும்.-கண்மணி
உன் சோகப் பெருமூச்சும் வேண்டாம்
என்னைத் தாலாட்டும் தென்றல் சூடாகிவிடும்.
எரியும் தீபங்கள் வேண்டாம்-விளையாடும்
விட்டில்கள் விழுந்து மடிந்துவிடும்

மண்ணுக்கு உரமான என் உடலும்
மலரே நீ சூடப் பூ பூக்கும்
விண்வாழும் என் உயிர்க்காதலும்
நலம் வாழ எந்நாளும் -உன்னை வாழ்த்தும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

ஓவியப் பாவை

ஏடொன்று நானெடுக்க-என் மனமோ படபடக்க
துடியிடையாள் பேரழகைத் தூரிகையால் நான் வரைய,
என்னென்பேன் என் உணர்ச்சிகளை, சொல்லறியேன் வார்த்தைகளில்,
எண்ணத்தில் தோய்ந்த என்மனமோ, வண்ணத்தில் தோய்ந்த
தூரிகையோ என்னதான் சொல்லிற்றோ?.மெல்லச் சிரித்தாள்.

இவள் செவ்விதழ்தேன், கள்ளோ? கனிரசமோ?
பற்கள் வெண்முத்தோ? முல்லை மொட்டோ?
புன்னகை, இன்னிசையோ, சங்கீதமோ?
நெஞ்சு வியக்க, என் தூரிகையும் மயங்க
காதல் போதையில் மனம் தள்ளாட
கண்ஜாடை காட்டி, “ஓவியரே” என அழைத்தாள்.

வில்லோ?, கயலோ? விழியாய் நின்றென்னை வீழ்த்தியது
குயிலோ? கொஞ்சும் கிளியோ? கூவி அழைப்பது,
மனம் தவிக்க, முல்லையும், மல்லிகையும்-மேனியில் மணக்க
முத்தப் பூக்கள் செவ்வாயில் அரும்ப நாணம் பூத்த நங்கை
அருகில் வந்தே காதல் சொல்லிய அழகு மங்கை

வந்தவள், என் நெஞ்சினில் சாய்ந்து-மஞ்சளும்,
குங்குமமும், மாங்கல்யமும் தர வேண்டுமென்றாள்-
பூங்குழல் சூடி வண்ணமலர் தினம் வேண்டுமென்றாள்
கண் துஞ்சிடும் பொழுதினும் கனவாய் வந்து காதல் தந்திட
வரம் வேண்டுமென்றாள் பூநெஞ்சினில் பூத்த
காதலால் தினம் என்னைப் பூஜிக்கும் தேவதை

மங்கையவள் வேண்டுதலால் மனமகிழ்ந்து
வானூரும் நிலவும், தேனூறும் மலர்களும் சாட்சியாக
வரம் கொடுத்தே மனம் களித்த காதலன் நான்
உயிராய், மெய்யாய் என்னுள் கலந்த உறவை
உதிரமாய், உயிர்காற்றாய் உலவும் உயிரை
கட்டியணைத்தே காதல் சொன்ன ஓவியன் நான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பச்சை மரத் தீ

வான் வண்ணத்தை வண்ணமகள் துகில் கொள்ள,
கான மழையாய்க் கனிமொழியின் பாடல் ஒலிக்க,
மான் விழியாள் தழுவி மலர்க் கரத்தால் மாலை சூட,
சூடிக் கொடுத்த கோதையே, என்னைத்
பாடி அழைத்த சீதையோ நான் சூடும் மணமகள்

கண்களால் இதயத்தைப் பரிமாறிக்
கவிதையாய்க் காதலை மொழி மாற்றி
காதல் இலக்கியம் படிப்பித்தவள்
காதல் இலக்கணம் தவறிய கொடுமை

எண்ணித் துடித்தும், அவள் எண்ணம் துளைத்தும்
நாளும் வாடித் துடிக்கும் இதயம், மாதை தேடித்தவித்தும்,
மதுவை நாடித்துடித்தும் அவளை மறக்கத் தவிக்கும்
தோற்றுப்போன காதல் நெஞ்சம்.

எரியும் மெழுகாய் உருகும் இதயம் கண்ணீரில் தவமிருக்க,
பச்சை மரத்தை பற்றிய தீயாய்-சோகம் இதயத்தை எரிக்க,
அச்சாணி முறிந்த தேராய் வாழ்வு
ஊமை கண்ட கனவாய் காதல் கனவு.

பாரியின் தேரில் படர்ந்த முல்லை இன்றோ
புழுதியில் வாடிக்கிடக்க,
பேகனின் போர்வையில் இன்புற்ற கலாப மயில்
காதல் குளிரில் நடுங்கித் தவிக்க-
காதலும் பொய்யாகத் -தேரும், போர்வையும்
ஒன்றாய்க் களவு போனதே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பார்வதி-தேவதாஸ்

பாலும், தேனும் கலந்த -பாவையின்
காதல் மொழிகள், அமுதாய்க் காதில் பாய்ந்திட,
கயலும், மானுமாய் அசையும் அழகு விழிகள்
காதல் மழை பொழிந்திட
களிவெறி கொண்ட காதல் போதையில் உள்ளம்
காதல் குயில் பாடும் சோலையாய் நெஞ்சம்-அவள்
விழியசைவிலோ -கயல்களின் ஆனந்த நர்த்தனம்
சிரிப்பொலியிலோ கானக் குயில்களின் கீர்த்தனம்

மனக்காயங்களுக்கு காதல் மருந்தாய்
தொலைபேசியில் கேட்கும் அன்பு மொழிகள்,
வானில் உலவும் நிலவாய் இருந்தும்
தனிமைத்துயர் தணித்திடும் காதல் விருந்தாய்
“ஸ்கைப்பில்” தோன்றும் அழகு முகம்.

எட்டாத் தொலைவில் இருக்கும் நிலவாய்
என் இதயவானின் காதல் நிலா

கன்னச்சிவப்பினில் நாணம் வண்ணக்கோலமிட
குவளை விழிகளில் காதல் தேன் பொங்கி வழிந்திட
வண்ணக்கிளியும் காதல்மொழிந்திட-என்
எண்ணப்பறவை சிறகடித்து வானில் பறந்திட,
இதயம் எங்கும் காதல் மழை

இது கண் காணாத காதல்-இதயம்
படித்துச் சுவைக்க-இதயம் எழுதும் கவிதை
செவிகள்தாண்டி , இசை கடந்து
இதயம் இசைக்கும் தேவராகம்.

கம்பன் கண்ட சீதையா நீ ?- ஸ்ரீராமனாய்
உன்னைப் பிரிந்து நான் வாட,
காளிதாஸன் சகுந்தலையா நீ?-துஷ்யந்தன்
என்னைப் பிரிந்து நீ கண்ணீர்ப்பூச் சூட
பார்வதி, தேவதாஸாய் வாழ்க்கை
மலரும், தேனியுமாய் சேர்க்கை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பெண்மை

மலர் கொடுத்தேன், மயங்கி நின்றாள்
இதயம் கொடுத்தேன்-உயிர் கொடுத்தாள்
காதலித்தேன்-என்னைக் கவிஞனாக்கினாள்
தாலி கொடுத்தேன்--தெய்வமாக்கினாள்
வீட்டை கொடுத்தேன்-கோயிலாக்கினாள்

காய் கறி கொடுத்தேன்அமுது படைத்தாள்
என்னைக் கொடுத்தேன் -தன்னை இழந்தே
என்னைத் தந்தை ஆக்கினாள்.

வீடே இவள் கோயில்-கணவனே இவள் தெய்வம்
கலைமகளும், திருமகளும், மலைமகளும்
ஒன்றான,அன்னை-காலங்களில்
வசந்தமான பெண்மை

துன்பம் தாங்கும் பூமாதேவி-கலங்கிடும்போது
மார்போடணைத்து கண்ணீர் துடைத்துத்
தாய்மடி தரும் தாரம் இவள்
வேராய், விழுதாய் என்னைத் தாங்கும்
தெய்வபிறவி, இறைவன் துணையாய் தந்த தேவி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பிரியமானவளே

அழகே, நிலவென்பதாலா-உன்னை
நீ அலங்கரிப்பதில்லை?
மலர் என்பதாலா வாசனை பூசுவதில்லை?

அழகும், மணமும் அலங்கரிக்கும்-காதல் மலரே
உன் இதயமோ, எனக்காய்ப் பொங்கும் காதல் கங்கை
என்னை மயக்கும் அழகோ திருமகளின் தங்கை

உன் நெற்றிச் சுருளும் -நீள்விழிகளும், முத்துப்பற்களும்-
மோகனச் சிரிப்பும், உன் கன்னச் சிவப்பும்-கனி மொழிகளும்
கற்றைக்குழலும், நெற்றிப் பொட்டும் காணும்போதெல்லாம்-
என் நெஞ்சில் காதல் அவஸ்தையடி-உன்னை
எண்ணும்போதெல்லாம் என் நெஞ்சில் வண்ணக் கனவுகளடி.

வலி உன் கைகளை வாட்டியபோது என் கண்களிலோ-
கங்கை நதி-கட்டு உன் பொன்னுடலில் மொட்டவிழ்ந்தபோது
என் உயிர் கூட்டினிலோ-காட்டுத் தீ
பூச்சி உன் பொற்பாதத்தை தீண்டியபோது
என் உயிர் மூச்சினிலோ-முகாரி

கண்ணுக்குள் நிலவாகி, நெஞ்சுக்குள் தேனாகி
என் ஊனுக்குள் உயிராகி
உலாவரும் காதல் தேவதை நீதானோ?

காதலால் கனிந்து -உன் ஈர்ப்பினால்
எனையிழந்து -உன் பொன்மடி வீழ்ந்தேன்
காதல் ஈர்ப்புவிசையே
என்னை ஏற்பாயா? இல்லை மறுப்பாயா?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

காதல் பொல்லாதது

விழிகளோ, வேல்களாய் நெஞ்சைத் துளைக்கும்-தேன்
மொழிகளோ மதுவாய் மதியை மயக்கும்
நூபுரமும், மேகலையும் காதல் முரசு கொட்டும்
புன்னகையும், பூமணமும் உயிரை வாட்டும்

கண் மயக்கும் பேரழகோ,
காமன் கணையெனக் கனவிலும் வாட்டும்,
கனிமொழியாள் காதல் வைரஸ்
காதல் சுரமாய் நெஞ்சைத் தாக்கும்

புன்னகையோ, புண்பட்ட காதல் நெஞ்சுக்கு
காதல் சஞ்சீவினியாக-என் நெஞ்சிலோ
பொங்கிடும் காதல் வைகை-எனை ஆட்கொண்ட
ஆண்டாள் மனதிலோ சூடிக் கொடுத்த-
கோதையின் பேருவகை.

காளை நெஞ்சினிலோ, காதல்
சுரத்தின் கொடிய வேதனை-அவளை
எண்ணித் துடிக்கும் இதயம்
பெருமூச்சாய் நெஞ்சை எரிக்கும் சுவாசம்.

நாவினால் சுட்ட புண் உள்ளாறும்-ஆறதே
காதல் தீயினால் சுட்ட புண்
விழிகள் நீர் வடிக்க, மனமோ குறள் வடிக்க,
விழிகளிலோ கண்ணீர் மாலை ,
மொழிகளிலோ முகாரியின் ஆலாபனை.

காதலும் பொய்யாகிட-காளையின் மனமோ
வற்றிக் காய்ந்த வைகையாய் மாறிட
காளையர் நெஞ்சை மெல்ல கொல்லும் -கன்னியர்
காதல் -நஞ்சிலும் கொடிதே!

காதல் அஞ்சுகங்களாய் கொஞ்சிய நாட்கள் கனவானது-
சோடிக் குயில்களாய்ப் பாடிய காலம் பழங்கதையானது-
வானம் பாடிகள் பறந்த வானம் மாறவில்லை
கலாப மயில்கள் ஆடிய மண்ணம் மறையவில்லை

கன்னியின் காதல் மட்டும் மாறிட
ஒற்றைக் குயிலாய்க் கரையும் காலம் நிஜமானது
கண்ணீர்க் கடலில் மூழ்கிட காதல் கலைந்த கனவானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பொன்னூஞ்சல்

நிலவே, நீயின்றி என் நெஞ்சமெங்கும்
சூனியத்தின் ஆக்கிரமிப்பு,
மலரே, உன்னைக் காணாமல் என் விழிகளிலோ
ஒளியிழந்த அந்தகனின் பரிதவிப்பு.

வான்நிலவும் உன் முகம் காட்ட,
வீசு தென்றலும் நெஞ்சில் காதல் தீயை மூட்ட
நீ சூடும் முல்லையும், மல்லிகையும்
உனக்காயத் தவிக்க-என்
காதல் கனவும் கலைந்ததடி -என் வாழ்வும்
கண்ணீரில் மூழ்கும் காகிதக் கப்பலானதடி

என் வண்ணக் கோலமும் கலைந்திட
என் இதய கீதமும் சுரம் பிசகிட,
மாலை வருமுன் உதிரும் பூவானேன்
நெய்யின்றி அணையும் சுடரானேன்

என் பொன் வசந்தமே உன்னைப் பிரிந்து
ஊசிப்போன பண்டமாய் வாடித்தவிக்கும் என் உள்ளம்.
பாசி படர்ந்த பொய்கையாய் நாறிகிடக்கும் மனம்

என் பொன்னூஞ்சலோ - வெறுமையில் ஆடித்தவிக்க-
என்ஆவியோ -உயிரே உன்னை தேடி துடிக்க
ஏனடி என்னைப் பிரிந்தாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பூஞ்சிட்டு

வண்ணமோ பாலின் வெண்மையைப் பழிக்க
வாசமோ ரோஜா மணத்தைக் குறிக்க
வடிவமோ எழிழிற்கு இலக்கணம் வகுக்க
வானவர் அமுதெனத் தேன்சுவை இதழ்களில் இனித்திட
தேவர் உலகே காதல் கொள்ள தென்றலில் ஆடி நின்றாள்
அபிநயம் காட்டி நின்றாள் வெள்ளை ரோஜா.

பாடிப் பறந்த தேன் சிட்டு ஒன்று
ஆடி நின்ற பூவைக்கண்டு
உன்னை மறப்பதோ எந்தன் இறப்பு
உன்னை நினைப்பதோ எந்தன் உயிர்ப்பூ

பாடியே தன் காதலைச் சொல்லிட
உன் காதல் நிஜமானால்
கன்னி என்னைச் சிவப்பாக்கு
கருத்தோடு சொன்னது வெள்ளை ரோஜா.

கள்ளிருக்கும் வெண்மலரைக் காதலித்த பூஞ்சிட்டு
உள்ளிருக்கும் உயிர்க் காதல் மெய்யெனச் சொல்லிட
முள்ளால் தன்னுடலைக் கிழித்து
குருதியால் பூவை சிவப்பாக்கி உயிர் நீத்திட
வாடி வருந்தியது வண்ணரோஜா.

கள்ளிருக்கும் வெண்மலரை மனச்சிறையில் கவர்ந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தேடிய முட்கள்
உயிரிலும், உள்ளோடும் குருதியிலும் இருப்பது
புள்ளின் காதல் என்ற சேதியை மலருக்குச் சொல்லிட
காதல் மலரும் வாடி -பூஞ்சிட்டின்
காலடியில் விழுந்தே உயிர் துறந்தது.

இதழ்விரித்த மலரும் வாடிப்போனது.
சிறகு விரித்த சிட்டும் செத்துப்போனது
காதலர் மடியலாம், காதல் மடியாதது
காதலர் சொல்லிய பாடமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பூபாளம்

தித்திக்கும் முத்தங்களால் தேவாமிர்தம் தந்தவள்
எத்திக்கும் மகிழ்ந்தாட இதயத்திற்கு புதுநர்த்தனம் சொன்னவள்
பக்திக்கும், முக்திக்கும் காதலை ஈடாக்கி எனை ஆட்கொண்டவள்
ஆண்டாளோ? இல்லை மீராவோ? கண்ணா நீ சொல்.

தித்திக்கும் முத்தங்களால் மோகனமே- உன்
பூந்தேகத்தில் புதிய காதல் சூத்திரம் தீட்டவா?
பக்தியும் காதலும் இரண்டல்ல ஒன்றே என்று- சக்தியே-
சிவனாய்மாறி உன்னோடு ஆனந்தத் தாண்டவம் ஆடவா?

அர்த்தநாரிஸ்வரனாய் ஒன்றினைதலே உண்மைக் காதலடி
ஒன்றினுள் ஒன்றாய் உருவழியக் கலத்தல் இன்பமடி
சிருஷ்டி கர்த்தாவாய் நின்று தன்னை இரு பாலாய்ப் படைத்தவன்
ஒருபாலாய் ஒன்றினையும் பிரக்ஞ்ஞையின் சேர்க்கை-
அன்பே -அத்வைதமடி

“அயம் அஹம் பிரம்மம்” என்றே புகழ்ந்து பாடு
“அனல் கக்” என்று மனமே நாளும் மகிழ்ந்து ஓது
தந்தையும் நானும் ஒன்றே என்று தூய ஆவியால் கூவு
சிந்தையில் ஒன்றாகி சுத்த சைதன்யமாய் அனுபூதியில் உருமாறு.

இருப்பவர் நாமே என்றபோது இறைவனும்-: “மோ-
ஈசனும்” இருப்பில் ஒன்றே-மாயையில் இரண்டே
இன்றே என்னுடன் நீயும் பரகதியில் இருப்பாய் என்ற போது
இயேசுவும், டைஸ்மசும் சுத்த சைதன்யத்தில் சங்கமமே
சூனியத்தில் ஆனந்தமே

தூய மனமே ஆனந்தப் பள்ளு பாடு
ஆன்மா நான் என்றே கூவு
அனாத்மா நான் என்றே முழங்கு.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

காதல் போதை

செவ்விதழ் மதுவோ காதல் போதையைத் தூண்டும்,
செம்பவளக் கன்னங்களோ முத்த மழையை வேண்டும்,
கள்ளிருக்கும் மலர்கூந்தல் உன்னையும் ஒரு பூவாய் கொய்யவோ
என் நெஞ்சில் சூடவோ என குறும்புகள் செய்யும்

பூ விழிகளும் பார்வையால் நெஞ்சைத் தழுவி மகிழும்,
பிறை நுதல் சூடிய திலகமும் நாணிச் செம்மை காட்டும்,
முத்துப் புன்னகையால் நெஞ்சில் பூமழை பொழியும்
கத்தும் கடலாய் நெஞ்சில் காதல் அலை வீசும்

குமுத வாயில் அமுதச் சுவை பருகினால்
காதல் சுரம் தணியும்-கன்னியோடு
காதலாகிக் கனிந்து கலந்து
காமத்துப் பால் பருகிட-வள்ளுவன்,
வாசுகியாய் வாழ்வே ஈடேறும்
இல்லறம் நல்லறமாய் இன்புற
வீடே நாமடையும் பேறாகும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

பௌர்ணமி

கனவைக் கலைத்து , காதல் விழிப்பில் இதயம் துடிக்க
கண்களால் காதலை விதைத்தாய்
விண்ணும் மண்ணும் இணைந்து கவி பாட
நிலவும், மலரும் மகிழ்ந்தாட-என் வாழ்விலே வசந்தம்
என் இதயத்திலோ காதலின் சுகந்தம்.

நீயில்லாத வாழ்வை நெஞ்சம் நினைக்காது
நீயின்றி என் வாழ்வும் ஒரு நாளேனும் நிலைக்காது
நிழலாய் உன்னைத் தொடரும் எனக்கு
நினைவும் என் நிஜமும் நீதான்

நீயின்றி வாழ்வில்லை-உன்னைத் தவிர
நினைவேதும் எனக்கில்லை
இதயத்தை ஈந்து என் உயிரில் கலந்தவளே
என்றும் நீதான் என் காதல் உலகு

குபேர நிதி கிடைத்தாலும் -என் காதல் நிதி
என்றும் நீதான் -உன்னோடு தொடங்கி
உன்னோடு தொடரும் என் காதல் வாழ்வு,
நீயிருக்கும் இடமே என் சொர்க்கம்
நீயில்லாத இடமோ என் நரகம்.

உயிர் காற்றே என்னுள் நீ உலா வந்தாள்
என் வெற்றுப்புல்லாங்குழலில் காதல் இசை பிறக்கும்
என் பௌர்ணமியே என் வானில் நீ வந்தால்
என் வானும் ஒளி பெறும், என் பிறப்பும் ஈடேறும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

புல்லாங் குழல்

கண்பார்த்து நெஞ்செழுதிய காவியக் காதல்
கலைந்து போனதுமேனோ? வண்ண மலராய்
என்னுள் மலர்ந்தவள் வாடிப் போனதுமேனோ?
என் முழு நிலவுக்கு அமாவாசை வந்ததுமேனோ?

மண் பார்த்து நடந்தவள் மதிமுகம் பார்க்க
தினம் நான் தவமிருக்க,
குழல் இசையால் நான் சொன்ன காதல்
கார் குழலிக்கு தேனானது
கண்ணன் இசை ராதைக்கு வேணுகானமானது

கள்ளிருக்கும் வண்ண மலராய் மலர்ந்து
கருவான் தேன் நிலாவாய்
காதலன் நெஞ்சில் நித்தம் உலா வந்திட
நித்தம் என் வாழ்விலே காதல் வசந்தம்

உலாவந்த தேன் நிலவிற்கு என் உறவோ வான் ஆக,
மதுமலர் குழலிக்கு என் மனமோ பூவாக,
குழலிசையோ காதல் தூதாக-காதல் பூவனத்தில்
கதைபேசும் சோடிப் பைங்கிளிகள்-கான சபையில்
இசை மீட்கும் காதல் கருங்குயில்கள்.-நாங்கள்

இன்றோ ஒற்றை குயிலாய் என் புலம்பல்,
இசைக்க மறந்த வெற்று மூங்கிலாய் என் புல்லாங்குழல்.
காதலும் கலைந்த கனவாய், பழங்கதையாகிட
வாழ்வே மாயம் என்றானது-தேவதாஸாய் மனம் புலம்புது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

புத்துயிர்

பொய்யாய்க் கனவாய் பழங்கதையாய்போன வாழ்வில்,
காதலால் புத்துயிர் ஈந்தவளே-மெய்வாடிச் சோரும்
உயிரே உன் பூவிழிப் பார்வை தழுவாமல் -
கண் வாடிச் சிவக்கும் உன் நிலா முகம் காணாமல்

கை வாடிக் களைத்திருக்கும்- உன் கார் கூந்தலில்
மலர் சூடாமல்-நெய்யில்லாத மணி விளக்காய்
உயிர் வாடிச் சோர்ந்திருக்கும் -நிலவே
குமுத வாயில் அமுது பருகாமல்

வருவாயா வெண்ணிலவே என் வானம் ஒளி பெற-
காதல் தருவாயா காதல் பொன்மானே
என் மனமும் குணம் பெற.

காதலில் விழுந்தபின்-நெஞ்சிலே இன்பத் தவிப்பு
காதல் கொண்டபின்-காதலே வாழ்வு
காதல் இல்லையேல் சாவு என்னும் துடிப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023